விலுள்ள எல்லா மாநிலங்களுக்கும், முடிந்தால் வெளிநாடு களுக்கும் பால்வள நிறுவனம் மூலமாக அனுப்ப ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

*வினா எண். 801—திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் கழிவு நீர்வெளியே போக குழாய்கள், சாக்கடை வசதிகள் சீரழிந்து பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை சீரமைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை யில் கழிவுநீர் வெளியே செல்ல தற்போது பெருமளவிற்கு சாக்கடை வசதிகள் செய்யப்பட்டு அவை நகராட்சி சாக்கடைக் குழாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. தற்போது நிலைமை சீரமைக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, பெரிய ஆஸ்பத்திரி யாக இருக்கக்கூடிய இந்தக் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் நீண்ட பல வருடங்களாகவே பி.டபிள்யூ. டிபார்ட் மெண்ட் சார்பில் பழுது பார்க்கப்படாமல், சாக்கடை வசதி ஒழுங் காக இல்லாத காரணத்தினால், அங்கே வரக்கூடியவர்கள் சுகா தாரம் கெட்டிருக்கின்றது என்று சொல்லியும், நானும் நேரடி யாக ரிப்போர்ட் சொல்லியும் ரிப்பேர் செய்யப்படாமல் இருந்தது. அமைச்சர் அவர்கள் இப்போது ரிப்பேர் செய்யப்பட்டிருப் பதாகச் சொல்கிறார்கள். இருந்தாலும், அமைச்சர் அவர்கள் இந்த ஆஸ்பத்திரியை நேரடியாக ஒரு தரம் பார்த்து, அது இன் றைக்கும் சரியில்லை என்று சொல்வதால், இதிலே, விசேஷ கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

[1979 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் கழிவு நீரைப் பொறுத்த வரையில் அடைப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று அங்கிருந்து குற்றச்சாட்டுக்களும், புகார்களும் வந்தன. அதற்குப் பிறகு பொதுப் பணித் துறையில் இந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, பெருமளவிற்கு சாக்கடை வசதி செய்யப்பட்டு, இன்றைக்கு அது நகராட்சி சாக்கடையோடு இணைக்கப்பட்டு, இன்றைக்கு நிலைமை சீராக்கப் பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நகராட்சியினுடைய சாக்கடையோடு, இந்த ஆஸ்பத்திரியின் கழிவு நீர் செல்லும் சாக்கடையை இணைத்ததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. அந்த இடத்திலேதான் இந்தத் தகராறே இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில், விசாரித்த வகையில், ஆஸ்பத்திரியினுடைய குழாய் கீழாகவும், நகராட்சி சாக்கடையினுடைய குழாய் போகும் பாதை கொஞ்சம் மேலேயும் இருப்பதால், இந்தத் தண்ணீர் வடிந்து போகாமல், தேங்கி, இந்தத் தகராறு ஏற்படுகின்றது என்று சொல்லப்படுகிறது. அப்பேர்ப்பட்ட நிலைமை இருந்தால், அதுவும் சரி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பேர்ப்பட்ட அந்த கழிவு நீர்க் குழாயை ரிப்பேர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டு, இப்போது அந்தத் தண்ணீர் சரியாக, ஒழுங்காகப் போவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, கோவை மருத்துவமனையிலே கழிவு நீரை அப்புறப் படுத்துவதற்கும், அல்லது நோயாளிகளுக்குத் தேவையான குடி தண்ணீரை காலாகாலத்தில் ஒழுங்காக அளிப்பதற்கும் தேவையான ஏற்பாடு இல்லாத காரணத்தினால், கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஆஸ்பத்திரி நிர்வாகத்திற்கு மாறாக, பொதுப்பணித் துறையின் கீழ் இந்த நிர்வாகம் இருக்கின்ற காரணத்தினால், பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டு, காலாகாலத்தில் இந்த ஏற்பாடுகளை முறையாகச் செய்வதற்கு முடியாமல் இருக்கின்றது. இதை நிவர்த்திப்பதற்கு விசேஷ ஏற்பாடு செய்யப் படுமா ?

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மருத்துவமனை கட்டிடங்கள் அல்லது இது போன்ற பிரச்னைகளைச் சீரமைக்கும் பணி பொதுப்பணித் துறையின் கீழ் இருக்கின்றது என்பதையும், அதனால் பல்வேறு இடையூறுகள் இருக்கின்றன என்பதையும் இந்த அரசு உணர்ந்து, இந்த இடையூறுகளைக் களைவதற்காக வழிவகைகளைச் செய்வதற்கான தன்மைகளை இன்றைக்கு பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றது.

சென்னை நகரில் கொசு ஒழிப்பு.

*வினா எண் 802—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் கொசுத் தொல்லையை ஒழிக்க ஏதேனும் தனித் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : கொசு ஒழிப்புத் திட்டம், தேசிய யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம், மற்றும் நகர்ப்புற மலேரியா திட்டத்தின் கீழ் சென்னை நகரில் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. மேற் கூறிய திட்டங்களின்கீழ் கீழ்க்கண்ட சிறப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகிறது :—

(1) வளர்ந்த நிலையிலுள்ள கொசுக்களை ஒழிக்க ரூபாய் " 1,30,000 செலவில் 25 மிஸ்ட்பிளோயர்களும் '' 25 '' ஸ்விங் பாக்ஸ் கருவிகளும் '' வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(2) கழிவு நீர் பண்ணை, நீர் நிலைகளில் கொசுவை ஒழிக்க பவர் டில்லர்கள் பயன்படுத்தப்படுகிறது.

(3) கழிவு நீர் குழாய்களை சுத்தம் செய்ய தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(4) 1978–79-ல் மழை நீர் வடிகால் கட்டுவதற்கு ரூபாய் 39.80 இலட்சமும், கழிவு நீர் வடிகால் கட்டுவதற்கு ரூபாய் 14.70 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

(5) கம்பூசியா என்ற வகை மீன்களை வளர்த்து, கிணறு கள், மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் விடும் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.